# அன்னை பூபதி
# தமிழ்க் கலைக்கூடம்

## தமிழ்மொழி
## ஆண்டிறுதிப் பரீட்சை
## ஆனி 2012

## ஆண்டு 5

பெயர்: ______________________

வகுப்பு: ______________________

புள்ளிகள்: ______________________

____________________ ____________________

(ஆசிரியர் ஒப்பம்) (பெற்றோர் ஒப்பம்)

## ① அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

1. ஆழப்பெருங்கடலை ______________________ என்றும் கூறுவர்.
   (ஆழி, கடல், பரவை)

2. தமிழர் வணிகம் செய்த நாடுகளில் ஒன்று ______________________.
   (நோர்வே, சீனம், அமெரிக்கா)

3. ஒருவர் ______________________ மூலமே எந்த இனத்தவர் என்று அடையாளம் காணப்படுகின்றார்.
   (வாழிடமொழி, நாகரீகம், தாய்மொழி)

4. பூ + சோலை என்பதைப் புணர்த்தி எழுதினால் ______________________.
   (பூசோலை, பூச்சோலை, பூஞ்சோலை)

5. தன் இனத்தவரை அழைத்துக் கூடி உண்ணும் பறவை ____________________.
   (புறா, காகம், கிளி)

6. காளைகள் ______________________ சிங்கத்தை வென்றன.
   (வேற்றுமையால், ஒற்றுமையால், பிரிந்ததால்)

7. பேரன் என்பதன் பெண்பால் சொல் __________________________.
   (பேத்தி, கிளவி, குறத்தி)

8. தமிழில் உள்ள உயிர் எழுத்துகளின் எண்ணிக்கை ___________ ஆகும்.
   (8, 12, 30)

9. இரவில் கூடும் அங்காடியின் பெயர் ______________________ .
   (நாளங்காடி, அல்லங்காடி, அங்காடி)

10. அரங்கேற்றுக் காதையை எழுதிய புலவரின் பெயர்______________________ .
    (திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஔவையார்)

11. உப்பை உமிழ்ந்தால் அது ______________________ ச் சுவையைக் கொடுக்கும்.
    (புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு)

12. ஆடற்கலை பற்றி துல்லியமாகக் கூறும் நூல் ______________________.
(பரதநூல், தொல்காப்பியம், சிலப்பதிகாரம்)

13. பவளக்கொடி என்ற பாடலைப் பாடிய புலவரது பெயர் ____________________.
(திருவள்ளுவர், சோமசுந்தரபுலவர், ஔவையார்)

14. மன்னர்களுக்காக ஆடப்பட்ட கூத்து ________________________.
(வேத்தியல், பொதுவியல், கூத்தியல்)

15. கோலம் என்ற சொல்லின் பொருள் ______________________ .
(கோபம், அழகு, மகிழ்ச்சி)

16. அதிகாலை, விடியல் என்ற சொற்கள் குறிக்கும் இன்னொரு சொல்
______________________ .
(வைகறை, நள்ளிரவு, மதியம்)

17. ஆடலுக்கான குலத்தைச் சேர்ந்த பெண்களை ______________________
என்று அழைப்பர்.
(கூத்தர், விறலியர், பாணர்)

18. தைப்பொங்கல் ______________________ கொண்டாடப்படும்.
(தைமுதலாம்நாள், மாசிமுதலாம்நாள், பங்குனிமுதலாம்நாள்)

19. மலையும் மலை சார்ந்த இடமும் ______________________ எனப்படும்.
(முல்லை, குறிஞ்சி, நெய்தல்)

20. இளங்கோவடிகளால் எழுதப்பட்ட தமிழ்ப் பெருங்காப்பியம்
______________________ ஆகும்.
(சிலப்பதிகாரம், மணிமேகலை, நாலடியார்)

21. உறவினரை அணைத்து வாழ்தலை ______________________ என்பர்.
(அன்புகாட்டுதல், சுற்றந்தழால், கூடியணைத்தல்)

22. குறிஞ்சிநில மக்கள் ______________________ தெய்வத்தினை வழிபட்டனர்.
(முருகன், திருமால், வருணண்)

23. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது ______________________. (பகை, நட்பு, அன்பு )

24. சோழர்களின் கொடி ______________________ ஆகும்.
(சிங்கம், புலி, கரடி)

25. கணிகன் என்பதன் ஒத்தகருத்து சொல்______________________.
(சோதிடன், ஆசிரியர், அப்பா)

26. எமது தாயகத்தில் மேன்மைக்குரிய மலராக விளங்கும் பூ _________________.
(அல்லிப்பூ, கார்த்திகைப்பூ, தாமரைப்பூ)

27. ஒலிம்பிக் கொடியில் உள்ள வளையங்கள் ______________________ க் குறிக்கும்.
(நாடுகளை, கண்டங்களை, ஊர்களை)

28. ஈருடக உயிரிகள் ______________________ வாழும்.
(நிலத்தில், நீரில், நிலத்திலும்நீரிலும்)

29. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றை ______________________. என்று அழைப்பர்.
(நானிலம், ஐம்பொறிகள், ஆனைந்து)

30. வானொலியைக் கண்டுபிடித்தவர் ______________________.
(ரைட்சகோதர்கள், மார்க்கோணி, தோமாஸ்எடிசன்)

(30 புள்ளிகள்)

## ② தரப்பட்டுள்ள தொடர்களைச் சரியாக இணைக்கவும்.

| | |
|---|---|
| தமிழ் எங்கள் • | • ஆடற்குல மக்கள். |
| தமிழர் வீரச் சாவடைந்தவர்களுக்கு • | • மருதம் எனப்படும். |
| பழந்தமிழ்க் கலையான பரதத்தை • | • உயிர்ப்பின் இருப்பு. |
| வயலும் வயல் சார்ந்த இடமும் • | • முன்னாளில் கூத்து என்பர். |
| கூத்தர், விறலியர் • | • நடுகல் நாட்டுவர். |

(5 புள்ளிகள்)

## ③ கீழுள்ள பகுதியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

### உண்மை பேசுவோம்

உண்மை பேசுதல் உயர்ந்த பண்பாகும். 'உண்மை உயர்வு தரும்'. நாம் என்றும் உண்மை பேச வேண்டும். பொய் பேசுதல் பெரும் பாவமாகும். "பொய் சொல்லக் கூடாது பாப்பா" என்று பாரதியார் பாடியுள்ளார். உண்மை பேசுதலால் உயர்வடையலாம் என்பதற்கு அரிச்சந்திரன் கதை நல்ல எடுத்துக்காட்டாகும். உண்மை என்பதற்கு வாய்மை, சத்தியம், மெய் எனப் பல பொருள் கூறுவர். உண்மை சொல்லிக் கெட்டார் எவரும் இல்லை. மனதில் பொய் இல்லாமல் நேர்மையோடு வாழும் ஒருவன் உலகத்துச் சான்றோர்களின் மனங்களில் எல்லாம் உயர்வாக மதித்துப் போற்றப்படுவான். இது வான்புகழ் கொண்ட வள்ளுவர் வாக்காகும். நாமும் உண்மை பேசி உயர்வடைவோம்.

1. உண்மை என்ற சொல்லின் ஒத்த சொற்கள் 2 தருக?

2. பொய் பேசுதல் எப்படியானது?

3. உண்மை பேசுதல் பற்றி வள்ளுவர் என்ன கூறியுள்ளார்?

4. உண்மை பேசுதலால் உயர்வடையலாம் என்பதற்கு யாருடைய கதை எங்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது?

5. உண்மை பேசுதல் எப்படியான பண்பாகும்?

(10 புள்ளிகள்)

## ④ பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. தமிழர் புத்தாண்டின் மறுபெயர்கள் 2 தருக.

______________________________

______________________________

2. ஐம்பொறிகள் எவை?

______________________________

______________________________

3. தமிழீழத்தின் தேசிய அடையாளங்களான பூ, விலங்கு, மரம் ஆகியவற்றைத் தருக.

______________________________

______________________________

4. மாந்தை எந்தப் பெருநிலத்தின் துறைமுகமாக இருந்தது?

______________________________

______________________________

5. சிற்றுயிர்கள் இரண்டின் பெயரை எழுதுக.

______________________________

______________________________

(15 புள்ளிகள்)

## ⑤ பாடலைப் படித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஆடும் மயிலே ஆடும் மயிலே
ஆடல் எங்கே கற்றாய் நீ
பாடும் குயிலின் பாட்டுக்குப்
பாவம் எங்கே கற்றாய் நீ

நீலப் புள்ளிப் பசுந் தோகை
நீட்டிச் சுழன்று ஆடுகிறாய்
கோல மயிலே உன்னோடு
ஆட நானும் வரலாமா!

1. யாருடைய பாட்டுக்கு மயில் ஆடுகிறது?

______________________________

______________________________

2. மயிலின் தோகையிலுள்ள புள்ளிகளின் நிறம் என்ன?

______________________________

______________________________

3. மயில் எதை நீட்டிச் சுழன்று ஆடுகிறது?

______________________________

______________________________

4. மயிலின் ஆடலுக்குப் பாடல் பாடுவது யார்?

______________________________

______________________________

5. மயிலைப் பார்க்க விரும்புகிறீரா? ஏன்?

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

## ⑥ வாழிடமொழிச் சொல்லியங்களை உமது தாய் மொழியில் எழுதுக.

1. நான் கோடைகால விடுமுறைக்குத் தாயகம் சென்றேன்.

___________________________________________

___________________________________________

2. நானும் எனது அக்காவும் பாடசாலைக்குச் சென்றோம்.

___________________________________________

___________________________________________

3. தமிழ்மொழி மிகவும் பழைமையானது.

___________________________________________

___________________________________________

4. நாங்கள் நேற்று பூங்காவிற்குச் சென்றோம்.

___________________________________________

___________________________________________

5. நீங்கள் அனுப்பிய அஞ்சல் கிடைத்தது.

___________________________________________

___________________________________________

(10 புள்ளிகள்)

**⑦ கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **தன்னந்தனியே** | **மீண்டும்மீண்டும்** | **குறுகுறு** | **பழகப்பழக** | **கல்விகேள்விகளில்** |

1. கூரையில் இருந்த புறாக்கள் ______________________ என ஒலி எழுப்பின.
2. நற்பண்புடையாரது நட்பு __________________________ இன்பம் தரும்.
3. மாறன் உற்றார் உறவினர் இன்றித் ________________________ வாழ்கிறான்.
4. _______________________________ சிறந்தோரைச் சான்றோர் என்பர்.
5. ஒரு நூலை __________________________________ கற்க நற்கருத்துகள் தோன்றும்.

(5 புள்ளிகள்)

**⑧ பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து, 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. **தொல்வணிகம்**
   - வியாபாரம்
   - ஏற்றுமதி, இறக்குமதி
   - ஏற்றி இறக்கிய பொருட்கள்
   - நாடுகள்
   - சான்றுகள்

2. **தைப்பொங்கல்**
   - தமிழர் திருநாள்
   - தை முதல்நாள்
   - கீழ்வானம் வெளுத்தல்
   - கோலமிடல், நிறைகுடம்
   - பொங்கல் படைத்தல்

3. **பனிக்காலம்**
   - பருவகாலம்
   - காலநிலை
   - விளையாட்டுகள்
   - சுற்றுலா
   - விடுமுறை

(15 புள்ளிகள்)